REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 9உ வெள்ளி (22—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 10உ சனி (23—4—55) [இதழ் 266

தொழிலாளர் படை: திட்டக் குழு திரட்டும்?

புதுடில்லி, ஏப். 21—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 100 அல்லது 120 லட்சம் பேருக்கு வேலையளிப்பது சம்பந்தமாக தொழிலாளர் படை ஒன்றைத் திரட்ட வேண்டும் எனத் திட்டக்குழுவின் பொருளாதார நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கின்றனராம்.

வட கிழக்கு எல்லைப் பகுதியில் கொந்தளிப்பு

துப்பாக்கிப் படையினர் மீது நாகர் தாக்குதல்

அமைதியை நிலைநாட்ட இராணுவ ஏற்பாடு

நாகர்கள் தனிநாடு கோரிக்கையின் எதிரொலி

ஷில்லாங், ஏப். 21—

இந்தியக் குடியரசுத் தலைவரின் பிரதிநிதியாக அசாம் கவர்னரின் நேரடியான ஆட்சியின்கீழ் இருந்துவரும் வட கிழக்கு எல்லைப் பகுதி, அரசியல் கொந்தளிப்புக்கு ஆளாகி இருக்கிறது. நிர்வாகம் சரியத் தொடங்கியிருக்கிறது.

ஆயுதம் தாங்கிய துப்பாக்கிப் படையைச்சார்ந்த தனி நபர்கள் தாக்கிக் கொல்லப்படுவதாகவும், உட்பகுதியில் உள்ள மலைவாசிகளிடம் அச்சமூட்ட குறிப்பிட்ட மலைஜாதித் தலைவர்களிடம் நாகர்களால் துப்பாக்கிகள் தரப்பட்டிருப்பதாகவும் அரசாங்க அறிக்கை அறிவிக்கிறது.

நாகர் தேசீயக் குழுவின் பிடிப்புக்குட்பட்ட நாக மலை ஜாதியினர் தங்களுடைய நாக மலைப் பகுதிக்குச் சுதந்திரம் கோரி வருகின்றனர். அசாம் மாநில சட்டசபைக்கு நடைபெற்ற சென்ற தேர்தலில் கலந்துகொள்ளாது இருந்துவிட்டனர்.

பலாத்காரத்தில் ஈடுபட்டுள்ள நாகர்கள் மீது உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது என தீர்மானிக்கப்பட்டு இருப்பதாகவும், அதற்காகத் துப்பாக்கிப் படைக்கு உதவியாக இராணுவத் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கிறது எனவும், பலாத்காரச் செயல்களைச்செய்துவரும்நாகர்கள்மறைந்துகொண்டிருக்கும் சில இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டதாகவும், அரசாங்க அறிக்கை தகவல் தருகிறது.

மார்ச்சு மாதம் 26-ந் தேதி, அசாம் துப்பாக்கிப் படையைச் சேர்ந்த ஒருவர் தூக்கிச் செல்லப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் அதுவுமன்றி அரசாங்கத்திற்கு விசுவாசமுடன் இருந்து வரும் கிராம காட்டாண்மைக்காரர்களும், அரசியல் மொழி பெயர்ப்பாளர்களும் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றனர் என அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

ஷாம்னூர் என்ற இடத்தில் உள்ள பாதுகாப்பு நிலையத்தை மார்ச் 27-ந் தேதி சில மலை ஜாதியினர் முற்றுகையிட்டுத் தாக்க முயன்றனர். ஆனால் தற்செயலாக அவர்களில் ஒருவர் வைத்திருந்த துப்பாக்கியிலிருந்து, எதிர்பாராவகையில் வெடிகிளம்பவே, மற்ற மலை ஜாதியினர் விரண்டு ஓடிவிட்டனர் அவர்களைத் தொடர்ந்து சென்ற பாதுகாப்புப் படை, மலை ஜாதியினர் விட்டுச் சென்ற வளைந்த கத்திகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு திரும்பினர்

கிரீசில் மீண்டும் நில நடுக்கம்

துறைமுகம் அழிந்தது

கிரீசில் மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டு 12 பேர் உயிரிழந்தனர் என்றும் இத்துறைமுகம் முழுவதும் அழிந்துபட்டது என்றும் கூறப்படுகிறது.

கலக்கமுற்ற மக்கள் மலையடிவாரத்திற்கு ஓடினராம். கடந்த செவ்வாயன்று ஏற்பட்ட நில நடுக்கத்தைவிட இது மிகக் கடுமையானதாயிருந்ததாம்.

★

ஷில்லாங்கில்!

ஷில்லாங்கிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், 21-ந் தேதியன்று மாலை நில நடுக்கம் ஏற்பட்டதாம் நாற்பது விநாடிகள் நீடித்த இந்த நில நடுக்கத்தால், சன்னல்களும், கதவுகளும் ஆடினவாம்; கலக்கமுற்ற மக்கள், வீடுகளினின்றும் வெளியேறி தெருக்களில் கூடிவிட்டனராம். சேதமேதுமேற்பட்டதாக தகவல் இல்லை.

32 அரசியல் கைதிகள் நாடு கடத்தப்பட்டனர்?

ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்

கோவா அடக்குமுறை உச்சம் பெறுகிறது

பெல்காம், ஏப். 21—

போர்த்துகீசிய போலீசாரால் கடந்த ஒரு திங்களுக்குமுன் கைது செய்யப்பட்டு, கொடிய அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட கோவா அறப்போர் வீரரான லட்சுமண் வேலிங்கார் என்பவர், போலீசாரின் மிருகத்தனமான தாக்குதல் விளைவித்த காயங்களுக்கு நேற்றிரவு பலியானார் என்று தெரிய வருகிறது.

சடலத்தைக் கூடப் பெற்றோரிடம் தர மறுத்து, இரகசியமாகப் பிரேதத்தைக் கொளுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது.

அகுவாட் என்றஇடத்திலிருந்து 32 அரசியல் கைதிகள் ஒரு கப்பலில் போர்த்துகீசிய கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள லொரான் சோமரா குவே என்ற இடத்திற்கு நாடு கடத்தப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இராமநாதபுரத்தில் தடை உத்தரவு

இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் மறவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பினை ஒட்டி, இராமநாதபுரத்திலும் 10 மைல் சுற்றளவிலும், கூட்டங்களோ ஊர்வலங்களோ நடைபெறக் கூடாது என்று 144 தடை உத்தரவினை இராமநாதபுரம் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி பிரகடனப்படுத்தியுள்ளார்.

தடை உத்தரவு 15 நாட்களுக்கு நீடிக்கும் என்றும், போலீசார் பலத்த பந்தோபஸ்து வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

1,800 தீப்பெட்டி தொழிலாளர் வேலை நிறுத்தம்

பாரெய்லி (உ. பி.) ஏப். 21—

கிளட்டர் பக்கன் எனும் இடத்தில் உள்ள 'வெஸ்டர்ன் இந்தியா' தீப்பெட்டித் தொழிற்சாலையைச் சேர்ந்த 1,800 தொழிலாளர்கள், தங்களில் ஒருவரை, மேற்பார்வை அதிகாரிகளில் ஒருவர் தாக்கியதை எதிர்த்து கடந்த ஒன்பது நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

நான்கு வல்லரசு மாநாடு

நான்கு வல்லரசுகளும் கூடி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் முயற்சிக்கும் என்றும், வெறெந்தப் பிரச்சினையும் இதற்கு இடையூறாக இருக்காது என்றும் பிரிட்டிஷ் பிரதமர் சர் அந்தோனி ஈடன் கூறியிருக்கிறார்.

ரஷ்யாவுடன் சாதாரண உறவு ஒன்று ஏற்படுத்திக்கொள்ள தமது நாடு விருப்பம் கொண்டுள்ளதாகவும், ஆனால் மக்கள் சீனாவை அங்கீகரிக்க தாங்கள் இன்னும் தயாராக வில்லை என்றும் ஜப்பான் பிரதமர் ஹாடோயாமா கூறியிருக்கிறார்.

40 கோடி ரூபாய் செலவில் குண்டா மின்சாரத் திட்டம்

மேற்கொள்ள இந்தியப் பேரரசின் அனுமதி கோரப்பட்டிருக்கிறதாம்!

நிர்மாண இடத்தை காண நிதி மந்திரி வருகிறாராம்!

சென்னை அரசாங்கத்தின் உத்தேச ஏற்பாடான குண்டா நீர் மின்சார உற்பத்தித் திட்ட நிர்மாண இடத்தை, மே மாத மத்தியில் நீலமலைக்கு வரவிருக்கிற இந்தியப் பேரரசின் நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் காண்பார் எனத் தெரியவருகிறது.

குண்டா நீர் மின்சாரஉற்பத்தித் திட்டமானது, குண்டா நதியின் நீரையும், நீலமலைப் பகுதியில் தேங்கும் நீரையும் கொண்டு, மின்சார உற்பத்திக்கு வழி செய்வதாகும். சென்னை மாநிலத்திற்கு மின்சார விநியோகம். செய்யும் மின்சார அமைப்புடன் அது இறுதியாக இணைக்கப்படும். அவ்விறுதியை அடைய மூன்று கட்டங்களாக மேற்படி திட்டம் செயலாற்றப்பட வேண்டி இருக்கிறது.

குண்டா நீர் மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு மொத்தத்தில் 40 கோடி ரூபாய் செலவாகும் என நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது.

துவக்கத்தில் 1,80,000 கி. வா. மின்சாரமும், இறுதியாக 3,75,000 கி. வா. மின்சாரமும் உற்பத்திச் செய்யக் கூடுமென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது

உற்பத்தி செய்யப்படும் முழு அளவு மின்சாரமும் சென்னை மாநிலத்திற்கே பயன்படுத்தப்படும் எனவும், கூர்க் மாநிலத்தைச் சேர்ந்த பார்போல் நீர் மின்சார திட்டமும் நிறைவேற்றப்பட்டு விட்டால், அதிலிருந்தும் சென்னைக்கு மின்சார உதவி கிடைக்கும் எனவும், மராமத்து மந்திரி சேதுபதி அறிவித்துள்ளார்.

குண்டா நீர் மின்சார உற்பத்தித் திட்டத்தைச் செயலாற்ற உடனடியாக அனுமதி அளிக்க இந்தியப் பேரரசை வற்புறுத்தியுள்ளதாகவும், மேற்படி திட்டத்தை நிர்மாணிப்பதற்கான துவக்கப் பணி அனைத்தும் சீர்செய்யப்பட்டு விட்டதாகவும், அனுமதி கிடைத்ததும் வேலை துவக்கப்படும் எனவும் சேதுபதி மேலும் விளக்கம் கொடுத்துள்ளார்.

காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிராக!

காங்கிரஸ் உறுப்பினர்களே வாக்களித்தனர்!

சாந்திகார், ஏப். 20—

"ஒரே ஒரே வாக்கைச் சாதகமாகப் பெற்ற காரணத்தினால், பஞ்சாப் காங்கிரஸ் மந்திரி சபை தோல்வி பெறுவதிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறது.

சமூக நலத் திட்டப் பகுதியில் பணிபுரியும் சிலவகை உத்தியோகஸ்தர்களின் நியமன உரிமையை பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடமிருந்து பறித்துவிட்ட அரசாங்க உத்திரவுக்கு எதிராக, எதிர்க் கட்சியினர் பஞ்சாப் மேல்சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். எதிர் கட்சியினருடன் சேர்ந்துகொண்டு எழு காங்கிரஸ் உறுப்பினர்களும் தீர்மானத்திற்குச் சாதகமாக வாக்களித்தனர். இருந்தாலும் ஒரு வாக்கு கூடுதலாக அரசாங்கம் பெற்றதால், அரசாங்கம் தோல்வியிலிருந்து தப்பியது

சமூகநல உத்தியோகஸ்தர்களில் 50 சதவிகித உத்தியோக நியமனத்தை தனது சொந்தப் பொறுப்பாக்க அரசாங்கத்திற்கு உரிமை தந்திருப்பதுதான் மேற்படி உத்திரவாகும்.

வங்காளப் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது

வங்காளி—அசாமி பிணக்கு நீடிக்கிறது!

கௌஹாத்தி, ஏப். 21—

இங்குள்ள 'இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு,' 'ஆனந்த பஜார் பத்திரிகா' ஆகிய இரு பத்திரிகை அலுவலகங்கள், இன்றிரவு யாரோ சிலரால் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அலுவலகப் பொறுப்பாளராயிருந்தவர், இரவு 11 மணிக்கு சுமார் 30 பேர்கள் அலுவலகங்களைத் தாக்கி கண்ணாடி சன்னல்களை உடைத்து பெயர் பலகைகளை அகற்றிச் சென்றதாகக் கூறியிருக்கிறார்.

சென்னை நகரைச் சேர்ந்த கல்லூரிகள், பள்ளிகளைச் சேர்ந்த 30 மாணவிகள், மகாபலிபுரத்தில் கொட்டும் மழையையும் கவனிக்காமல் கிராமக் குடிசைகளைச் சீரமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனராம்!

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—4—'55 வெள்ளி

புகை பிடிக்கும் புண்பட்ட நெஞ்சம்!

பொதுவாகவே, இன்று நாட்டு மக்களில் பெரும்பாலானோர் நல்ல உடல் நலத்துடன் இருக்கவில்லை.

வறுமை தரும் வாட்டம், அவர்களது உடல் நலத்தைப் பெரும் அளவு பாதித்திருக்கிறது. வளமான வாழ்வில்லாமையால் மக்கள் வளர்ச்சி குன்றிப்போய், குறைந்த ஆயுட்காலம் மட்டுமே வாழக் கூடியவர்களாய்—அந்தக் குறைந்த ஆயுட்காலத்திலும் நாளொரு பெயரும் பொழுதொரு எண்ணிக்கையுமாய் வளர்ந்துவரும் நோய்கள் பலவற்றிற்கு இரையாகி அவதியுறுகிறார்கள்.

தொழுநோய் போன்றநோய்களின் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர்கள் லட்சக்கணக்கானோர்.

காசம் போன்ற நாசகால நோய்கள், மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதிக்கு மேல் வளைத்து, அவர்களை அணு அணுவாகக் கொல்கின்றன.

இப்படிப் பெரும் நோய்கட்கும், அவ்வப்போது தலைகாட்டி தொல்லை தந்து செல்லும் சிறு சிறு நோய்கட்குமாக, மக்கள் எல்லோருமே ஆளாகிற நிலை நாட்டில் இருக்கிறது.

இந்தப் பல்வகையான நோய் நொடிகள் மக்களைப் பிடிப்பதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அந்தக் காரணங்களைக் கண்டறிந்து நோய்கள் பரவாது தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் நீங்காக் கடன் என்பது ஒருபுறமிருக்க, மக்களும் தங்கள் பங்கிற்கு, நோய்கள் வளருவதற்கான வகையில் பழக்கங்கள் சில வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தவறுடையதாகாது.

உதாரணமாக, காசம், புற்று நோய் போன்ற கொடிய நோய்கள் புகை பிடிப்பதினால் மட்டுமேதான் மக்களைப் பிடிக்கின்றன என்றில்லாவிடினும், புகை பிடிப்பதாலும் அவ்வகை நோய்கள் மக்களை ஆட்கொள்கின்றன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இன்று, புகை பிடிக்கும் பழக்கம் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக சர்க்கார் வெளியிட்டுள்ள புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

நாகரீகம் என்ற பெயரில் நடுத்தர மக்களும், இளைஞர்கள் பலரும், இந்த தேவையற்ற—தீமையான பழக்கத்திற்கு தங்களை அடிமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சிகரெட் பிடிப்பவர்களில் பெரும்பாலானோருக்கு இந்தத் தீய பழக்கத்தால் ஏற்படக் கூடிய கொடிய விளைவுகள் தெரிந்தே இருக்கின்றன. விளைவுகளின் கொடிய தன்மை—ஒரு பெரும் சமுதாயத்தின் நல்வாழ்வையே பாழ்படுத்தும் காசம், புற்றுநோய் போன்ற நோய்கள் பரவுகிற நிலை—வேண்டுமானால் சிலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

'புகை பிடிப்பது ஒரு தீய பழக்கம்; உடல் நலத்தைப் பாதிக்கும்; வளர்ச்சியைக் குன்றச் செய்யும்,' என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்துதானிருக்கிறது.

புகை பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகியுள்ள இளைஞர்களும், குறிப்பாக மாணவர்களும் அந்தத் தீய பழக்கத்தின் கொடுமைகளை உணரக் கூடியவர்களாயிருப்பதால், நாட்டு நலன் கருதி—தங்களின் எதிர்கால நல்வாழ்வு கருதி, தாங்கள் கைக்கொண்டுள்ள அத்தீய பழக்கத்தினை விட்டொழிக்க வேண்டும். 'சிகரெட் புகைப்பது நாகரீகம்' என்றெண்ணுவது, நாகரீகத்தின் உட்பொருளை தெரிந்து கொள்ளாத நிலையைத்தான் காட்டும் என்பதையும் அவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

சாதாரண மக்கள், பாட்டாளிகள், தொழிலாளர்கள் முதலானோர் புகை பிடிக்கிறார்கள். சுருட்டும், பீடியும் அவர்களது புகைச் சாதனங்கள். நம் மக்களில் பலர் இந்த புகை பிடிப்பதினை, இன்று, 'இன்றியமையாத தேவை' என்று கருத வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பகலும், இரவும் உழைத்து உருக்குலையும் பாட்டாளியும், தொழிலாளியும், சாதாரண மக்களும் 'நாகரீகம்' என்பதால் அல்ல புகை பிடிப்பது, தாங்கள் மேற்கொள்ளும் கடுமையான உழைப்பு தரும் சோர்வு நீங்க, அந்த மக்களுக்கு வழி என்ன? உழைத்துப் பெறும் பொருள் 'கைக்கும், வாய்க்கும்' வாழக்கூடப் போதுமானதாயில்லையே என்ற மனக்கவலை நீங்க மருந்து எங்கே?

இப்படி நலிந்துபோன அந்த மனிதர்கள், 'புண்பட்ட தங்கள் நெஞ்சினை, புகைவிட்டு ஆற்றிக்கொள்ள' நினைக்கிறார்கள். சோர்வு நீங்கி உற்சாகம் பெறவும், கவலையகற்றி சற்று 'களிப்பு' பெறவும் காரமான பீடிப் புகையை நாடுகிறார்கள் என்று கூறுவது முழுவதும் தவறுடையதாயிருக்க முடியாது.

எனவே, இந்த மக்களுக்கு நல் வாழ்வு கிடைக்கும்போதுதான், புகை 'தேவையற்றது' என்பதை உணர்வர் என்றுலும், அது மிகையாகாது. அந்த நல்வாழ்வை அவர்களுக்குத் தருவதுடன், அதற்கிடையில், அவர்கள் உபயோகிக்கும் பீடிக்கும் வரி விதித்து 'கஜானா'வை நிரப்பக் காத்துக் கிடக்கும் அரசாங்கம், புகை பிடிப்பது, தனிப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி—பொதுவாக, நாட்டு மக்களின் மொத்த நல்வாழ்விற்கே எவ்வளவு தீமை பயப்பது என்பதை மக்கள் உணருமாறு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்தத் தீய பழக்கத்திற்கு தங்கள் வருவாயில் ஒரு பகுதியையும், உடல் நலத்தையும் பலி கொடுத்து வரும் மக்கள், தங்களை அந்த தீய பழக்கத்தினின்றும் விடுவித்துக் கொள்ள முன்வருவார்கள். தங்களைப் பீடிக்கும் கொடிய நோய்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதின் மூலம், நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் வழிகோலியவர்களாவர்.

அரசாங்கம் செய்யுமா?

இந்தியா-பிரிட்டன் வர்த்தக மதிப்பு

இவ்வாண்டு ஜனவரி—பிப்ரவரி மாதங்களில் பிரிட்டனிலிருந்து இயந்திர சாதனங்களையே இந்தியா அதிகமாகக் கொள்முதல் செய்திருக்கிறது.

ஜனவரி—பிப்ரவரி மாதங்களில் சுமார் 3,64,76,000 பவுன்கள் மதிப்புள்ள சரக்குகளை பிரிட்டனுக்கு இந்தியா அனுப்பியிருக்கிறது.

பிரிட்டனிலிருந்து கொள்முதல் செய்த சரக்குகளின் மதிப்பு 2,01,29,000 பவுன்களாகும்.

இந்த மாதங்களில், இந்தியா கொள்முதல் செய்த இரும்புச் சாமான்கள் — இயந்திரங்களின் மதிப்பு மட்டும் சுமார் 1,20,00,000 பவுன்களாகும்.

இலங்கையிலிருந்து பணம் அனுப்பசிலகட்டுப்பாடுகள்

இலங்கையிலிருந்து இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதற்கு இலங்கை சர்க்கார் சில கட்டுப்பாடுகள் விதித்துள்ளதாக, டெல்லி மேல்சபையில் அமைச்சர் குகா தெரிவித்திருக்கிறார்.

சட்ட பூர்வமான 'பாஸ் போர்ட்'டும், தற்காலிக குடியிருப்பு கால பர்மிட்டும் வைத்திருப்பவர்கள் மணியார்டர் மூலம் ரூ. 30-ம், அல்லது பாங்கி மூலம் ரூ. 50-ம் அனுப்பலாமென்றும் மூலதனம் பற்றிய அயல் நாட்டவருக்குள்ள விதிகளே இந்தியருக்கும் பொருந்தும் என்றும் இவை தவிர்த்தமற்றமுழுவிபரமும் தமக்கு தெரியாதென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், 'பர்மாவில் இந்தியர்கள் முதலீட்டுக்கு எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது,' என்று குறிப்பிட்டார்.

கோசி அணைத் திட்டம்

கோசி அணைத் திட்டப் பிரதேசத்தில், சுமார் 10,000 மாணவர்கள், கிழக்குக் கரை அமைப்பு வேலையில் ஈடுபட்டுள்ளனர். 1955 ஏப்ரல் 18-ந் தேதி வரை மொத்தம் 12,73,315 கன அடிக்கு மண் வேலை நடைபெற்றிருக்கிறது.

சென்னை நகரில் 111-புது காலனிகள்!

கடந்த ஐந்தாண்டுகளில் சென்னை நகரில் 111 புதுக்காலனிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும், அவற்றுள் 453 தெருக்களும், 6,741 குடிசைகளும் உள்ளன என்றும் சென்னை நகர சபை மேயர் நகர சபைக் கூட்டத்தின் போது தெரிவித்திருக்கிறார்.

அந்தப் புதுக் காலனிகளில் சக்கூஸ் சுத்தம் செய்து வசதியளிக்கும்படி உபரியாக 30 நகர சுத்தித் தொழிலாளர்களை நியமிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது குறைந்த பட்சம் 100 நகரசுத்தித் தொழிலாளர்களை நியமிக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது.

கேட்டீரா சேதி!

போர்த்துக்கல் ஆதிக்கத்திலிருக்கும் டாமன் பகுதிகளில் அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலைகள் ஒரேயடியாக உயர்ந்து விட்டதாகத் தெரியவருகிறது வெங்காயம் வீசை விலை ரூ. 4½-ஆகவும், ஒரு வீசை உருளைக் கிழங்கு ரூ. 6 ஆகவும் விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த விலைக்குக் கூட, அப்பொருள்கள் இலகுவில் கிடைப்பதற்கு அரிதாக இருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

எல்லாம் ஊழல் மயம்!

மேலும் சில 'ருசி'யான விபரங்கள்

இந்தியாவின் வெளி நாட்டு இலாகாவிலும், மற்ற இலாகாக்களைப் போலவே ஊழல்கள் நடைபெற்றுள்ளன.

சர்க்காரின் முன் அனுமதியின்றியே, ஒரு வெளி நாட்டுத் தூதுவர், 1949 ஜனவரி முதல் 1951 டிசம்பர் வரை மாதந்தோறும் ரூ. 5000 வரை வாடகையாகத் தந்துவந்திருக்கிறார்.

சர்க்காரின் நிதி நிலையை நன்கு தெரிந்துகொண்டு, அதற்கேற்ப நடந்து கொள்ளாத அந்தத் தூதுவரால் சர்க்காருக்கு ரூ 37,003 தண்டச் செலவு ஏற்பட்டதாம்.

வேறொரு தூதுவர் தனது குடியிருப்புச் செலவுக்காக, தனக்கு முன்பிருந்தவர்கள் செலவழித்ததைக் காட்டிலும் ஏழு மாதங்களில் ரூ. 28,000 அதிகம் செலவிட்டிருக்கிறார்.

உணவு, விவசாய இலாகாவும் தன் பங்கிற்கு ஊழல் பட்டியல் வைத்திருக்கிறது.

எவ்வளவு தேவை என்பதைக் கூட அறிந்து கொள்ளாமல், இயந்திரங்களும், சாதனங்களும் வாங்கப்பட்டிருக்கின்றன.

இப்படி வாங்கப்பட்ட பொருள்களில் சுமார் 2,70,613 டாலர் பெறுமானவை, 'தேவைக்கு அதிகமானவை,' என்று கருதப்பட்டு வந்துள்ளன. இவற்றில் 58,691 டாலர் பெறுமானவை, வாங்கப்பட்ட விலைக்கு விற்றதுங்கூட இன்னும் 2,11,922 டாலர் பெறுமானவை தேங்கிக்கிடக்கின்றனவாம்

1949-லிருந்து இப்படி உபயோகமின்றிக் கிடக்கும் இயந்திரங்கள் சீக்கிரமே சர்க்காருக்கு பெருத்த நஷ்டத்தைத் தரும் அபாயத்திலிருக்கின்றன.

1950 ஆகஸ்டு 15-ல் திறக்கப்பட்டதிலிருந்து 1951 பிப்ரவரிக்குள்ளான மிகக் குறுகிய காலத்திற்குள் உற்பத்தி இலாகா துவக்கிய வீடு கட்டும் தொழிற்சாலையில் சர்க்காருக்கு ரூ. 10,33,243 நஷ்டமேற்பட்டிருக்கிறது.

இது தவிர, இந்த இலாகாவிடமிருந்த உபரியான பொருள்கள், குறைந்த விலைக்கு விற்கப்பட்டதினால் வேறு, பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

மராமத்து, வீடுகட்டுதல், 'சப்ளை' இலாகாவினர், ஏராளமான பணச் செலவில் பாலம் ஒன்று அமைத்தனர்; ஆனால், சில நாட்களில், அந்தப் பாலம், பெய்த மழையில் அரித்துக்கொண்டே போய் விட்டது.

பொது மராமத்து இலாகாவினர், சர்க்கார் குடியிருப்பு இடங்களுக்கு மின்சாரம் தந்தவகையில், மின்சார விலை விகிதத்தை அப்போதைக்கப்போது மாற்றாத காரணத்தால், ரூ. 38,566 வரை நஷ்டமடைந்தனர் என்று தெரிய வருகிறது.

டில்லியில், இடம் பெயர்ந்த மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தில மட்டும் சுமார் 7 லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கலாமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

இவை பற்றியும், இன்னும் இவை போன்ற ஊழல்கள் பல பற்றியும் இந்தியப் பேரரசின், தணிக்கை அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கை மக்கள் சபை முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டிருப்பது நினைவிலிருக்கலாம்

'மகா பஞ்சாப்' மாநில கோரிக்கை

சட்டசபைத் தலைவர்கள் ஆதரவு

இமாசலப் பிரதேசம், பஞ்சாப், பெப்சு, டெல்லியின் சில பகுதிகள் இவற்றைச் சேர்த்து ஒன்றுபடுத்தி, 'மகா பஞ்சாப் மாநிலம்' அமைக்க வேண்டுமென மாநில புனரமைப்புக் குழுவிடம் பஞ்சாப் மந்திரி சபை மனு தந்திருப்பதை பஞ்சாப் சட்ட சபைத் தலைவரான சர்தார் குர்தயால் சிங் தில்லான் என்பவரும் ஆதரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சவூர் சிங் என்ற மாநில மேல் சபைத் தலைவருங்கூட அதனை ஆதரித்திருக்கின்றாராம்.

இருவரும் மாநில புனரமைப்புக் குழுவினரைச் சந்தித்து தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளனராம்.

பஞ்சாப் மாநிலத்தில் போலீஸ் ஆட்சி!

சட்டசபையில் எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு

சாந்திகார், ஏப். 20—

"குற்ற இலாகா இரகசியப் போலீசார், பஞ்சாப் சட்டசபை உறுப்பினர்களை, தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்; 'டெலிபோன்' பேசும்போது, 'ஒட்டு'க் கேட்கின்றனர்; வரும் தபால்களை, 'தணிக்கை' செய்கின்றனர்; இவை, உறுப்பினர்களின் உரிமைகளைப் பறிப்பது மட்டுமின்றி சபையையும் அவமதிப்பதாகும்; இம்மாதிரி பஞ்சாபில், ஒரு போலீஸ் ஆட்சி தொடர்ந்து நீடிக்கிறது,"

என்று குற்றஞ்சாட்டி, உரிமைப் பிரேரேபணையை பஞ்சாப் சட்டசபையில், அப்துல் கனிதார் என்ற பிரபல எதிர்க் கட்சி உறுப்பினர் கொண்டுவந்தார்.

சபைத் தலைவர் தனது தீர்ப்பில், பிரேரேபணை கூறுவதை ஒதுக்கி வைத்துக்கொண்டு, இது பற்றி தான் விசாரிப்பதாகக் கூறினார்.

இதற்கு முன் அப்துல் கனி, ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவந்தார்.

தலைவர், தீர்மானத்தை நிராகரித்துவிட்டு, தீர்மானம் குழப்பமிகுந்ததாயிருப்பதாயும், யார் மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதே தெளிவாயில்லை என்றும் கூறியிருக்கிறார்.

பின்னர் முதன் மந்திரி பீம் சேன் சச்சார், மாநிலத்தில் போலீஸ் ஆட்சி நீடிப்பதாகக் கூறுவது தவறு என்றும், எந்த உறுப்பினரின் உரிமையிலும் அரசாங்கமோ, போலீசோ தலையிடவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

மருந்துஉற்பத்தியாளர் கொள்ளை இலாபம்

மந்திரி டி. டி. கே. சாடுகிறார்

"இந்திய மருந்து உற்பத்தியாளர்களும் அமெரிக்கர்களைப்போல் கொள்ளை இலாப மடிப்பதிலேயே கருத்தும், கவனமும் கொண்டிருக்கிறார்கள்; இச்செய்கை விஞ்ஞான அறிவாளிகளின் சுரண்டலே ஆகும்; தயாரிக்கப்படும் மருந்துகள், ஏழைகள் மலிவான விலையில் வாங்கிப் பயனடையக் கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு, இந்திய சர்க்கார் தொழில், வர்த்தக அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் புது டில்லியில் நடைபெற்ற மருந்து அபிவிருத்திக் குழுக்கூட்டத்திற்கு தலைமையேற்றுப் பேசுகையில் கூறினார்

மருந்துகளின் விலை ஒரேயடியாக அதிகமாக இருப்பதைக் கண்டித்துப் பேசிய அவர், மேலும் 'விலை உயர்வைத் தடுப்பதற்கு ஏதாவதொரு விதத்தில் சர்க்கார் கட்டுப்பாடு இருக்க வேண்டியது அவசியம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1953—54-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் மொத்த மதிப்பு, அதற்கு முந்திய ஆண்டின் ஏற்றுமதிகளைக் காட்டிலும் சுமார் ரூ 31 கோடி அதிகம் இருக்கும்.

"தவருன நோக்கும் ஆபத்தான விளைவும் கொண்டவை"

கைத்தறி நெசவு: நூற்பு ஆலை விசாரணைக் குழுவின் சிபாரிசுக்கு கைத்தறியாளர் கண்டனம்

ஐதராபாத், ஏப். 19—

அகில இந்திய கைத்தறி நெசவாளர் காங்கிரஸ், இந்திய சர்க்காரின் நூற்பு ஆலை விசாரணைக் குழு, கைத்தறித் தொழில் பற்றிக் கொண்டுள்ள நோக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

அந்தக் குழுவின் சிபாரிசுகள் அமுல் செய்யப்படுமானுல் ஆபத்தான விளைவுகள் ஏற்படுமெனவும் காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

அகில இந்திய கைத்தறி நெசவாளர் காங்கிரசின் செயற் குழு 'கைத்தறி பாதுகாப்பு வாரம்' என்று மே மாத இறுதியில் ஒரு கொண்டாட்டம் நடத்த வேண்டும் என்றும், அப்போது, நூற்பு ஆலை விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் எவ்வளவு 'தீங்கானவை' என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்றும் எல்லா நெசவாளர் சங்கங்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

கைத்தறித் தொழில் பிரச்சினையையே, குழு, 'உர்பத்தித் திறமை' எனும் நோக்குடன் கவனித்திருக்கிறதே அல்லாது, 'எல்லோருக்கும் வேலை வேண்டும்,' என்ற நோக்குடன் கவனிக்கவில்லை என, என் ஜி ரங்கா தலைமையில் கூடிய சங்கத்தின் நிர்வாகக் குழு தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

நூற்பு ஆலை விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் அமுலாக்கப் படக்கூடாதென்பதற்கான காரணங்களையும் காட்டி, அவற்றை கண்டித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகர் மாவட்ட 'கலெக்டரை' நியமித்தனர். அவரது தீர்ப்புக்கு இருசாராரும் கட்டுப்படுவதாக வாக்களித்தனர்.

அவரது தீர்ப்புப்படி கால்வாய்ப் பாசனம் பெற்று விளையும் நிலங்களுக்கு ஏகர் ஒன்றுக்கு ரூ. 50-ம், இதர நீர்ப்பாசன வசதிகளால் விளையும் நிலங்களுக்கு ஏகருக்கு ரூ. 35-ம், கரும்பு விளைவிக்கப் படாத நிலத்திற்கு ரூ. 25-ம் குத்தகைத் தொகை தரவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கிறது.

அந்தக் குடியானவர்கள், தங்கள் நிலங்களை மேலும் 30 ஆண்டுகளுக்கு விட ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் உற்பத்தியான சணல் பொருள்களின் மொத்த அளவு, அதற்கு முந்திய ஆண்டைவிட சுமார் 50,000 டன் அதிகமாகும்.

வேட்டி, சேலை உற்பத்தி

'கைத்தறிக்கே ஒதுக்குக !'

நெசவாளர் மாநாட்டுத் தீர்மானம்

பெல்காம், ஏப் 20—

'பாரதீய ஜன சங்' ஏற்பாடு செய்த நெசவாளர் மாநாடு ஒன்று, நாடு முழுவதுமாக உற்பத்தியாகும் வேட்டியையும், சேலையையும் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் எனக் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தெங்க்டி என்பவர், மாநில மத்திய அரசாங்கங்கள், மாவட்டந்தோறும் கைத்தறி விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும், கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் கோரினுர் எனத் தெரிய வருகிறது.

சர்க்கரை ஆலை நிர்வாகிகளுடன் குடியானவர் தகராறு

அகமத் நகர், ஏப். 20—

திலகர் நகரில் உள்ள மகாராஷ்டிர சர்க்கரை ஆலையின் நிர்வாகிகளுக்கும், 22 கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்களுக்குமிடையில் இருந்துவந்த தகராறு அகமத் நகர் மாவட்ட அதிகாரியால் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அந்த 22 கிராமங்களைச் சேர்ந்த 450 நிலச் சொந்தக்காரர்களுக்குச் சொந்தமான 10,480 ஏகர் நிலத்தை ஆலை நிர்வாகிகள் குத்தகைக்கு எடுத்து கரும்பு பயிரிட்டு வருகின்றனர்.

சென்ற ஆண்டில் நிலச்சொந்தக்காரர்கள் எல்லாரும், அதிகமான குத்தகைத் தொகை வேண்டுமெனக் கோரி கிளர்ச்சி செய்தனர். அதை ஒட்டி சுமார் 300 குடியானவர்களும், 11 அரசியல் ஊழியர்களும் கைது செய்யப்பட்டனர்.

பம்பாய் அரசாங்கம் இந்த தகராறைத் தீர்த்துவைக்க அகமத்

தி. மு. கழகப் பொதுக் குழு

"24—4—55-ல்சென்னை,வண்ணுரப்பேட்டை தியாகராயர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழகப் பொதுக் குழுவிற்கான ஏற்பாடுகளை சென்னை மாவட்ட தி. மு. கழகம் சிறப்புற கவனித்து வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் பொதுக்குழு உறுப்பினர்களை வரவேற்க சென்னையின் இரு முக்கிய (சென்ட்ரல், எழும்பூர்) புகை வண்டி நிலையங்களிலும் 24—4—55 காலைமுதல் கழகச் சின்னம் அணிந்த தொண்டர்கள் அணிவகுத்து நிற்பர். வெளியூர் பொதுக்குழு உறுப்பினர்கள் கழகத் தொண்டர்களின் வாயிலாக தியாகராயர் கல்லூரியை அடைவதற்கான வழியையும், வசதியையும் பெற்றுக்கோள்ளலாம்,"

என்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிருர்.



வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்கு, சென்னை முதல் மந்திரி காமராசர் அவர்கள், 17—4—55 அன்று வந்து, மேற்படி பாடசாலையைப் பாராட்டிப் பேசும்போது எடுத்த படம்.

****

தலைமைக் கழகம் : அறிக்கை—11/55

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர் !

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணுரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள் :—

1. பொதுச்செயலாளர் தேர்தல்
2. மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்

அன்பன்,

சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

"அறிவகம்" சென்னை
14—4—55

****

நிலச் சீர்திருந்தம்பற்றி காமராசர்

"நிலச் சீர்திருத்தச் சட்டம் பொதுவாகக் கொண்டுவரப் படுவதால், தஞ்சைப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை திருச்சி மாவட்டத்திற்கும் நீடிக்கவேண்டும் என்பதற்கு அவசியமில்லை," என்று, சென்னை மாநில முதலமைச்சர் காமராசர் கூறியிருக்கிருர்.

வரும் ஆகஸ்டு திங்களில் நடைபெற இருக்கும் சென்னை சட்டசபைக் கூட்டத்தின்போது நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான மசோதாவைக் கொண்டுவர சென்னை மாநில சர்க்கார் மிக்க ஆவல்கொண்டுள்ளதென்றும், நிலச் சீர்திருத்தத்திற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகளனைவரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

சர்க்கார் தலையிடுவதற்கான அளவுக்கு அரிசியின் விலையோ, மற்ற பண்டங்களின் விலையோ குறைந்துவிடவில்லை என்றும், கூடிய விரைவிலேயே நகரப் புறங்களிலும் கிராமங்களிலும் உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் சரியாகிவிடுமென்றும் அவர் கூறினுர்.

இது தவிர, உ. பி.-யிலிருந்தும், ம. பி. -யிலிருந்தும் பல பருப்பு வகைகள் இறக்குமதியாவதால் இங்குள்ள விலைவாசிகள் ஏறத்தாழத்தான் இருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரகாசத்திற்கு உபகார சம்பளம்

மந்திரி சபை முயற்சி?

ஆந்திர முன்னுள் மந்திரியான 85 வயதான டி. பிரகாசம் அவர்களுக்கு ஓய்வு, உபகாரச் சம்பளம் தந்து பெருமைப்படுத்துவது பற்றி மந்திரி சபை வட்டாரத்தில் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

எந்த முடிவும் மேற்கொள்ளப் படுவதற்கு முன், காங்கிரஸ் மேலிடம் கலந்தாலோசிக்கப்படும் என்று தெரியவருகிறது.

இந்த ஆலோசனை மிக அவசியம் என்று கருதப்படுவதற்குக் காரணம், ஒரு அரசியல் தலைவருக்கு இம்மாதிரி உபகாரச் சம்பளம் தருவது ஒரு புது முறையை வகுப்பதாகும் என்பதேயாம்.

நெருக்கடி நிலைமை ?

பார்மோசாவுக்கு அமெரிக்க அதிகாரிகள் விரைவதேன் ?

பார்மோசாப் பகுதிகளில் இப்போது நெருக்கடியான நிலைமை நீடித்து வருவதால், சியாங் சர்க்கார் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென அமெரிக்க துணை இராஜாங்க அமைச்சர் வால்டர் ராபர்ட்சனும் அமெரிக்க இராணுவக் காரியாலய பிரதம கூட்டுத் தலைவரான அட்மிரல் ஆர்தர் ராட்போர்டும் பார்மோசாவுக்குச் செல்லுவதாகப் பத்திரிகை ஒன்று அறிவிக்கிறது.

ரிசர்வ் பாங்கி அதிகாரிகள்

ஆயிரக்கணக்கில் சம்பளம் பெறுவானேன் ?

புதுடில்லி, ஏப். 20—

"இந்திய 'ரிசர்வ் பாங்கி'யில், மாதந்தோறும் ரூ. 2000-த்திற்கும் அதிகமாகச் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் பலர் இருக்கின்றனர்; ஆனுல், ரூ. 5,000 சம்பளம் பெறும் அதிகாரிகள் இருக்கின்றனராவென்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது."

என்று, டில்லி மேல்சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மத்திய மந்திரி ஏ. சி. குகா தெரிவித்திருக்கிருர்.

"இம்பீரியல் பாங்கியில் வேலை பார்க்கும் அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று பண்டித நேரு குறிப்பிட்டது, ரிசர்வ் பாங்கி அதிகாரிகளுக்கும் பொருந்தாதா?" என்று மதூர் என்ற சுயேச்சை அங்கத்தினர் ஒருவர் கேட்டபோது, மந்திரி குகா, "பிரதம மந்திரியின் கருத்துக்கள் பொதுப்படையாக இருந்தன; தனிப்பட்ட பாங்கிகள் உட்பட எல்லா பாங்கிகளுக்கும் பொருந்தக்கூடியது; ஆனுல், அவற்றை எல்லாம் உடனுக்குடன் அமுல் செய்வதென்பது சாத்தியமானதல்ல ; அது ஒரு நீண்ட கால திட்டம்," என்று குறிப்பிட்டிருக்கிருர்

"ரிசர்வ் பாங்கி அதிகாரிகள் பொறுக்கப்படும்போது, சில பகுதிகள் புறக்கணிக்கப்படுவதாக மக்களிடையே ஒரு அதிருப்தி நிலவுவது சர்க்காருக்குத் தெரியுமா?" என்று கேட்டபோது, அமைச்சர், சர்க்கார் இதற்கென ஒரு நிரந்தர நிறுவனத்தை வைத்திருப்பதாயும், அந்த நிறுவனத்தின் அன்றாட வேலைகளில் சர்க்கார் தலையிட்டுக் கொண்டிருக்க முடியாதென்றும், இதுவரை மக்களிடை அப்படி ஒரு அதிருப்தி நிலவுவதாக சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஆந்திர சிமெண்ட் தொழிற்சாலை

விரிவாக்குவதற்கு இந்திய சர்க்கார் அனுமதி

விஜயவாடாவிலிருக்கும் ஆந்திர சிமெண்ட் தொழிற்சாலையை இப்போதுள்ள உற்பத்தி அளவில் இன்னும் மூன்றில் இரண்டு பகுதி அதிகமாக, உற்பத்தி செய்கிற வகையில் விரிவுபடுத்திக் கொள்வதற்கு இந்தியப் பேரரசு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இப்போது அந்தத் தொழிற்சாலை ஆண்டுதோறும் ஒரு லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்கிறது என்று கூறப்படுகிறது.

இந்திய சர்க்கார் 1953—54-ம் ஆண்டில், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காகக் கடனுகவும், மானியத் தொகைகளாகவும் வழங்கியுள்ள தொகை ரூ. 8 கோடி.

பிரிட்டனிலிருந்து சிங்கப்பூருக்கு !

தரை மார்க்கமாகச் செல்ல மாணவர்கள் முயற்சி

பிரிட்டனிலிருந்து சிங்கப்பூருக்கு தரைமார்க்கமாகச் சென்று திரும்ப ஆறு பேரடங்கிய பிரிட்டிஷ் மாணவர் குழு ஒன்று திட்டமிட்டிருக்கிறது பிரயாண காலம் ஒன்பது மாதங்களாகும்.

"மோட்டார்களும் — சாதனங்களும் வெப்பதட்ப நிலையை எப்படித் தாங்குகின்றன ; பாலைப் பிரதேசம், மலை, சமவெளி, காடுகளில் அவை எப்படி ஓடுகின்றன," என்பவைபற்றி தகவல்களைச்சேகரித்து உற்பத்தியாளர்களுக்கு உதவும், பொதுவான பிரதேசத் தகவல்களைச் சேகரிக்கவும் குழுவினர் திட்டமிட்டிருக்கிருர்கள்.

சாதுக்கள் மடத்தை ஆக்கிரமித்தனராம்!

பெண் உட்பட ஏழு பேர் கைது

ஆமதாபாத், ஏப். 20—

ஜெயின் சாதுக்கள் தங்கும் மடம் ஒன்றின் பூட்டை உடைத்து உள்ளே சென்று குடிபுகுந்து கொண்டதாக ஒரு பெண் உட்பட ஏழு பேர்களை போலீசார் கைது செய்துள்ளனராம்.

சாதுக்கள் இல்லாத நேரத்தில் மடத்தினுள் சென்று அதனை ஆக்கிரமித்துக்கொண்டதாக மடத்தின் நிர்வாகிகளில் ஒருவர், போலீசில் புகார் செய்ததின் பேரிலேயே அந்த ஏழு பேரும் கைதாயினராம்.

தொழிலாளி திறந்துவைத்த பாலம்!

விஜயவாடா, ஏப். 20—

கிருஷ்ணு நதியின் மேற்கு பிரதான கால்வாயின் மீது கட்டப்பட்டுள்ள பாலம் ஒன்றை 62 வயதுடைய தொழிலாளி ஒருவர், போக்குவரத்திற்காகத் திறந்துவைத்தார்.

இந்தப் பாலம் சுமார் ரூ 7,75,000 செலவில் கட்டப்பட்டது என்றும், 5 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டது என்றும் தெரியவருகிறது.

நிறைவேறியது !

இந்திய அரசியல் சட்டத்தின் நாலாவது திருத்த மசோதா, டில்லி மேல் சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. சபையில் இருந்த மொத்தம் 139 உறுப்பினர்களும் மசோதாவை ஆதரித்து வாக்குச் செய்துள்ளனராம் ; ஒருவர்கூட எதிர்க்கவில்லை என்று தெரிகிறது.

பாண்டுங் மாநாட்டில்.....!

★

ஆசிய - ஆப்பிரிக்க மாநாட்டின் தலைமைப் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் குழு சில முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. மாநாட்டின் இறுதிப் பேரறிக்கையில் இத்தீர்மானங்கள் எல்லாம் இடம் பெறும் என்று தெரிகிறது.

பாலஸ்தீன அரபுகளுக்கு அனுதாபம் தெரிவிக்கிறது—ஐ. நா. தீர்மானப்படி பாலஸ்தீனப் பிரச்சினை சுமுகமாகத்தீர்க்கப்படவேண்டும்.

தென்னாப்பிரிக்கா முதலிய பகுதிகளில் நிலவும் இன வெறியை கண்டித்திருக்கிறது.

எல்லா நாடுகளுக்கும், எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு.

டுனீசியா, மொராக்கோ, அல்ஜீரியா ஆகியநாடுகளுக்கு சுதந்திரம் வழங்க பிரெஞ்சு சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்.

மேற்கு நியூகினியை இந்தோனேஷியாவிடம் ஒப்படைக்க ஹாலந்து சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்.

அணுசக்திக்கு அகில உலக நிறுவனம்

இத்தீர்மானங்களல்லாது, அணுசக்தி சம்பந்தமாக, அகில உலக நிறுவனம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று மாநாட்டின் பொருளாதாரக் குழு சிபாரிசு செய்துள்ளது.

பார்மோசா: இலங்கைப் பிரதமர் கருத்து

பார்மோசா பிரச்சினை சம்மந்தமாக இலங்கைப் பிரதமர் தரும் கருத்துப்படி, பார்மோசா, கம்யூனிஸ்டு சீனாவிடமோ சியாங்கே ஷேக்கிடமோ இருத்தலாகாது; அதனை 'தர்மகர்த்தா' நிர்வாகத்தில் வைத்திருக்க வேண்டும். பின் எல்லா மக்களும் பங்கு பெறும் தேர்தல் நடத்தி ஆட்சிப் பொறுப்பை பார்மோசா மக்களிடமே ஒப்புவித்துவிட வேண்டும் என்றும் கூறப்படுகிறதாம்.

உருப்படாதது

"இலங்கைப் பிரதமர் பார்மோசா பற்றி தெரிவித்துள்ள கருத்தை சம்பந்தமுள்ள எந்தத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்," என்று, பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் கருத்தறிவிக்கின்றனர்.

கவலை தருகிறது

பார்மோசா நிலை மேலும் நெருக்கடியாகியுள்ளது என்பதறிய ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டினர் கவலைப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

மோதுதல்!

டச்சு நியூகினியா, இந்தோனேஷியாவிற்குச் சொந்தமானது என்ற கோரிக்கையில், பாகிஸ்தானும் சீனாவும், ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டு அரசியல் குழுவில் மோதிக்கொண்டன என்று தெரிகிறது.

இந்தோனேஷிய சீனர்

இந்தோனேஷியாவில் உள்ள சுமார் 25 இலட்சம் சீனர்களின் இரட்டைக் குடி உரிமை பிரச்சினை பற்றி இந்தோனேஷியாவிற்கும்—சீனாவிற்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

கடந்த நான்காண்டுகளாக, இப்பிரச்சினையில் எவ்வித உடன்பாடும் காணப்படாமற்கிடந்தது.

இந்த உடன்பாட்டின்படி இந்தோனேஷியாவில் வசிக்கும் சீனர்கள் இந்தோனேஷியக் குடி உரிமையையோ அல்லது சீனக் குடி உரிமையையோ கோரலாம் என்று தெரிகிறது.

காவிரி நதித் திட்டங்கள்

புனர் பரிசீலனை செய்யப்படும்

திருச்சி, ஏப். 21—

காவிரி நதியில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள மேல்வாய்க்கால் புள்ளம்பாடி திட்டங்கள் பற்றி மீண்டும் தீவிரமான ஆராய்ச்சி நடைபெறும் என்றும், பணவசதி ஏற்பட்டதும் சீக்கிரம் அத்திட்டங்கள் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் இங்கு அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது.

இத்திட்டங்கள் பற்றி பரிசீலிக்க தனியாக ஒரு எஞ்சினீயரிங் பிரிவும் ஏற்படுத்தப் பட்டுள்ளதாம்.

தொழிலாளர்களுக்குத் தனி மருத்துவமனை!

பம்பாயில், ஆலைத் தொழிலாளர்களுக்கென 300 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ மனை ஒன்றினை நிறுவுவதென்று பம்பாய் ஆலை முதலாளிகளின் சங்கம் தீர்மானித்துள்ளதாம். இதற்காகும் நிலத்தை சர்க்கார் இலவசமாகத் தரும் என்றும் கூறப்படுகிறது.

கோதாவரியில் நிலக்கரி?

"கோதாவரி நதிப் பள்ளத் தாக்குகளிலிருந்து நிலக்கரி கிடைக்கக் கூடும் என்று அங்கு நடைபெற்ற 'சர்வே'யிலிருந்து தெரிய வருகிறது,"

என்று, டெல்லி மக்கள் சபையில் அமைச்சர் கே. டி. மாளவியா கூறியிருக்கிறார்.

கேளீரோ தோழர்காள்!

சென்ற காலம் சென்று மாண்டது — வருங்காலமே வருகவேனும் படை முழக்கம் கேட்கிறது..........

*

24-4-1955 மாலை 6-30 மணிக்கு

சென்னை, வண்ணையம்பதி,

தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில்

M. G. R. நாடக மன்றத்தினரின் புத்தம் புதுக் கருத்தோவியம்

'ஆசை நினைவு'

M. G. இராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, G. சகுந்தலா முதலியோர் பங்கேற்கின்றனர்

கட்டணம்: ரூ. 3, 2, 1, அணு 12

தோழர்கள் கொடுக்கும் சிறு சிறு தொகைதான்—எதிர்காலத்தை எழிலுள்ளதாக்கத் திட்டங்கள் தீட்டிக் கொடுக்கும்

மாநில மாநாடு

—தி. மு. கழக தலைமை நிலையம்

கழகக் கூட்டம்

★

கோலார் தங்கவயல்

உரிகம் மலையாளி மைதானத்தில் 24—4—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: மு. வளர்பிறை

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
டி. எஸ். ராபர்ட் வில்லியம்
கே. ஜி. சின்னராசன்

நகர இளைஞர் கழகம்

24—4—55 காலை 7 மணிக்கு, திரு சி. எம். பரிபூரணம் தலைமையில் சுகாதாரத் தொண்டர்கள் குருசடைபுரத்திற்குச் சென்று சுகாதாரப் பணியாற்றுவார்கள்.

கட்டாய சேமிப்பு நிதி

மேலும் பல தொழில்களுக்கு விரிவாக்கப்படுமாம்

"தொழிற்சாலைகளில் உள்ள எல்லா ஊழியர்களுக்கும் 'சேமிப்பு நிதி' (பிராவிடெண்ட் பண்டு) ஏற்படுத்தி, அதற்கு எல்லா முதலாளிகளும் பணம் செலுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்த 1925-ல் சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது; ஆனால், அச்சட்டம், சில பெரிய தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது; இப்போது அந்தக் கட்டாய முறையைப் பல தொழில்களுக்கும் அமுலுக்குக் கொண்டு வர சர்க்கார் யோசித்துவருகிறது," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

சுமார் 10,000 தொழிலாளருக்கு மேல் ஈடுபட்டுள்ள எல்லா தொழில்களுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டுமென்பதுதான் சர்க்காரின் தற்போதைய பிரச்சினை என்றும், ஒவ்வொரு தொழிலிலும் எத்தனை பேர் வேலை செய்து வருகிறார்கள் என்பது பற்றிய புள்ளி விவரங்கள் திரட்டப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறையை தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டத் தொழிலாளருக்கும் விரிவாக்குவது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

'போராட்ட'ச் சித்திரங்கள்!

இந்தியாவின் தேசிய வரலாறுகளையும், சுதந்திரத்திற்காக இந்தியா நடத்திய போராட்டத்தையும் இந்திய பாராளுமன்றக் கட்டிடத்தின் சுவர்களில் சித்திரமாகத் தீட்ட பூர்வாங்கமான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

அந்தச் சித்திரங்களில், 1947-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15-ந் தேதியன்று நள்ளிரவில் பதவி மாற்றம், செங்கோட்டையின் மேல் தேசீயக் கொடி ஏற்றப்பட்டது ஆகிய இரண்டும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளவையா யிருக்குமாம்.

பருக்கின் பரிதாப நிலை!

நாடாளும் மன்னனாயிருந்த முன்னாள் எகிப்து மன்னர் பருக், தமது கைச் செலவிற்குக்கூட பணமில்லாமல் வருத்தமுறுவதாகக் கேள்வியுற்ற கொலம்பியா நாட்டின் பொகோடாவிலுள்ள சமையல் அறைச் சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் முதலாளி, அந்த நிறுவனத்தின் 'டைரக்டர்' ஆகும்படி கேட்டுக்கொண்டு பருக்கிற்குக் கடிதம் அனுப்பியிருக்கிறாராம்.

டைரக்டர் பதவிக்கு மாதம் ரூ. 23,000 சம்பளம் என்று கூறப்படுகிறது.

இப்போதுள்ள பிரச்சினையெல்லாம்—அரண்மனையில் வாழ்ந்த பருக்—இவ்வேலையை ஏற்றுக் கொள்வாரா, மாட்டாரா என்பது தானும்!

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!

மதமும் மூட நம்பிக்கையும்

(இங்கர்சால்)

தமிழ்த் தழுவல் ஆசிரியர்:

நாவலர் **இரா. நெடுஞ்செழியன் M.A.**

விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை,

தெப்பக்குளம் :: திருச்சி

புகை பிடிக்கும் தீய பழக்கம்

வளருவதைக் காட்டும் புள்ளி விபரங்கள்

1953-ல் எடுக்கப்பட்ட புள்ளி விபரக் கணக்கின்படி இந்தியாவில் புகை பிடிக்கும் பழக்கம் அதிகமாக இருந்து வருவதாகத் தெரிகிறது.

1953-ல் உபயோகமான சிகரெட்டுகள் 1,852,70,00,000 (சுமார் 1,900 கோடி)

1954-ல் உபயோகமான சிகரெட்டுகள் 1,977,60,00,000 (சுமார் 2,000 கோடி)

1953-ல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான சிகரெட்டுகளில் செலவானவை: 3,40,00,000

1954-ல் செலவானவை 5,40,00,000.

கீழ்க்கண்ட புள்ளி விபரங்களிலிருந்து சுருட்டுக்களின் எண்ணிக்கை குறைந்து விட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

1953-ம் ஆண்டில் உபயோகமான நாட்டுச் சுருட்டுகள் 631,96,55,000.

1954-ம் ஆண்டில் அத்தொகை 471,86,31,000.

1953-ல், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான சுருட்டுகளில் உபயோகமானவை 41,08,000; 1954ல், அவைகளின் உபயோகம் 40,10,000.

கிராமாந்திரங்களில் பீடி குடிக்கும் பழக்கமும் அதிகரித்துள்ளது.

1952-ம் ஆண்டில் பீடிப் புகையிலை உபயோகம் 11,48,38,000 ராத்தல்.

1954-ல், அதன் தொகை 11,76,81,000 ராத்தலாகும்.

இதுபோலவே, வாய்ப் புகையிலை, ஹுக்காப் புகையிலையின் உபயோகமும் அதிகரித்துள்ளது என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விபரம் விளக்குகிறது:—

1952ல், 26,04,57,000 ராத்தல்
1954ல், 26,46,34,000 ராத்தல்.

★

புகை குடிக்காதீர்

"அமைச்சர்களெல்லோரும் நாட்டு மக்களின் பிரதிநிதிகள். அவர்கள், புகை குடிக்கும் பழக்கத்திற்கு ஆதரவு அளிக்கக் கூடாது; நாட்டு மக்களுக்கு சரியான வழிகாட்ட விரும்பினால் அவர்கள் புகை குடிக்கும் பழக்கத்தை விடவேண்டும்," என்று புருஷோத்தம் தாஸ் தாண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அகதிகளுக்கு வேலை தர ம. பி. சர்க்கார் முயற்சி

அகதிகளுக்கு வேலை தருவது என்பதற்காக, ஒரு 'ஸ்ட்ரா போர்ட்' தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்று மத்திய பிரதேச சர்க்கார் இந்திய சர்க்காருக்கு யோசனை தெரிவித்துள்ளதாம்.

மூடப்பட்டதாம்!

'அகிம்சையின் இருப்பிட'மாகவும், காந்தியாரின் வாழ்விடமாகவும் இருந்துவந்த சேவா கிராம ஆசிரமம் மூடப்பட்டுவிட்டதாம்!

இந்த ஆசிரம வாசிகளனைவரும் வினோபா பாவேயுடன் சேர்ந்து பூதான இயக்கத்துக்குத் தொண்டாற்ற முடிவு செய்ததே இதற்குக் காரணமாம்!

இராணுவ உடைகள்

இந்திய சர்க்கார் முடிவு

இந்திய இராணுவப் படையைச் சேர்ந்த சிப்பந்திகளுக்கும், அதிகாரிகளுக்கும் கொடுக்கப்பட்டு வரும் இராணுவ உடைகள் அனைத்தும் இனிமேல் அந்நியத் துணிகளால் அல்லாமல் இந்திய ஆலைத் துணிகளாலேயே தைத்துத் தரப்படும் என்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

மேலும், சமையல்காரர்களுக்குத் தரப்படும் குல்லாய், துண்டு, 'நாப்கின்' மேசை துடைக்கும் துணி ஆகியவைகள் யாவும் 'காதி'யிலேயே தைத்துத் தரப்படுமாம்.

இத்துணிகளை உபயோகிப்பதினால் குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி அடைவதும் சாத்தியமாகும் என்றும், சர்க்கார் தெரிவித்திருக்கிறதாகத் தெரிகிறது.

புராணங்களில் 'இடைச் செருகல்'கள்!

கையெழுத்துப் பிரதிகளைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சி

சிக்கிம், டார்ஜீலிங் ஆகிய மாவட்டங்களில் உள்ள நேபாள சமஸ்கிருத வல்லுனர்கள், 18 புராணங்களைப் பாதுகாப்பதற்காக அப்புராணங்களின் கையெழுத்துப் பிரதிகளை தேடிச் சேகரித்து வைப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளனராம். அச்சிடப்பட்ட அந்த 18 புராணங்களிலும் பல இடங்களில் 'இடைச் செருகல்'கள் உள்ளனவாம்.

தபால்—தந்தி இலாகா ஊழியர் கோரிக்கை தினம்

ஏப். 20-ந் தேதியன்று இந்தியா முழுமையிலுமுள்ள பல இடங்களில் தபால்—தந்தி இலாகா ஊழியர் கோரிக்கைதினம் கொண்டாடப்பட்டுள்ளது. மேற்படி இலாகா ஊழியர் சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

இரண்டாவது ஊதியக் குழு நியமித்தல், அடிப்படைச் சம்பளத்துடன் முழு கிராக்கிப்படியையும் இணைப்பது, ஊதிய விகிதம், பிரிவுகள், 'சீனியாரிட்டி,' முழு தொழிற் சங்க உரிமை வழங்குதல் ஆகியவைகளே அவர்களது முக்கிய கோரிக்கைகள் என்று தெரிகிறது.

வாணியம்பாடியில்........

வாணியம்பாடியில் இன்று மாலை 6 மணிக்கு, சங்கக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டுச் சென்றது. பின்னர், தபால் நிலையத்திற்கருகில், தபால் நிலைய அதிகாரி ஆர். சாந்தலிங்கம் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். சேஷாத்திரி, இ. எஸ். டி. கே. சீதாராமன், வி. இராமகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.